# டாக்டர் உ.வே. சாமிநாதையர்

தமிழ் திராவிட மொழிகளின் தாய். வடமொழிக்கு நிகரானது. உலக மொழிகளில் தொன்மையானது என்று சொல்ல ஒப்பிலக்கண மொழியறிஞர் கால்டுவெல் வந்தார். தமிழ் ஒருபடியாய் உயர்ந்தது.

பைந்தமிழ் நூல்கள் பாக்களாய்ச் சுவடிகளிலிருக்க, பதிப்பிக்க வேண்டி கால்கள் தேய நடையாய் நடந்தார். உடல் சோர்ந்தும் உள்ளஞ்சோராது கையெடுத்து வேண்டியும், கைப்பொருளால் தண்டியும் சுவடிகளைச் சேகரித்தார். இலக்கிய வளம் மிகுந்த செம்மொழி தமிழ் என உ.வே.சா. உணர்த்தினார். தமிழ் ஒரேடியாய் உயர்ந்தது.

வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரத்தில் வேங்கட சுப்பையருக்கும், சரசுவதி அம்மாளுக்கும் 19.02.1855 இல் மகனாய்ப் பிறந்தார். வேங்கடராமன் எனப் பெயரிட்டு வளர்ந்த இவர், தம் பேராசிரியர் மகா வித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் சாமிநாதன் என அழைக்கப்பட, அதுவே நிலைத்தது. ஆங்கிலம் படி இம்மை வாழ்வு வளம்பெறும் இல்லையேல் வடமொழி படி மறுமை வாழ்வு வளம் பெறும் என்று தந்தை சொல்ல, தமிழைப் படிக்கிறேன் இம்மை மறுமை இரண்டும் வளம்பெறும் என்று உ.வே.சா. கூறித் தமிழ் படித்தார். மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் தலைமாணாக்கராகித் தமிழைக் கசடறக் கற்றார். முடிகொண்டான் கோபாலகிருஷ்ண பாரதியிடம் தமிழிசை பயின்றார். கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராகப் பணியேற்றார்.

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்த சேலம் இராமசாமி முதலியார் எனுந்தனவந்தர் உ.வே.சா. அவர்களிடம் சிந்தாமணி சுவடிக்கட்டைத் தந்து, விளக்கிச் சொல்லுங்கள் என வேண்டினார். நூலருமை உணர்ந்த உ.வே.சா. எல்லா நூல்களுக்கும் இந்நிலை தானே என உளம் நொந்தார். இதுவே பதிப்பகப் பணிக்கு உ.வே.சா.-வை உந்தியது. புதிய பணி தொடங்கினார். சுவடி இருக்கிறது என்று யார் சொன்னாலும் காற்றாய்க் கடுகினா, கண் துஞ்சாது காரியத்தில் விழிப்பு வைத்துக் காடுமேடெல்லாம் சுற்றினார். தேடிக் கிடைத்த சுவடிகளில் பழுதுற்ற பாட்டுகள், இடைச்செருகல்கள், செல்லரித்தவை என எல்லாமிருந்தன. அறிவுக் கண்ணையும், ஆய்வுக் கண்ணையும் அகல விரித்து ஆழப் பொருளுணர்ந்து பதிப்பித்தார். தமிழை உயிர்ப்பித்தார். 1887இல் சிந்தாமணி முதலில் வர பத்துப்பாட்டும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் புறநானூறும் தமிழுக்கு வரிசையாய் வந்தன. ஐங்குநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், குறுந்தொகை முதலான சங்க நூல்களும், பரணி நூல்களும், புராண நூல்களும் அடுத்தடுத்து வெளி வந்தன. பாரதியார் சென்னையில் தங்கியிருந்த நிறைவு நாட்களில் உ.வே.சா.வின் சொற்பொழிவுகளைக் கேட்டார். தமிழ்ப்பணியைப் பாராட்டினார். மொழியறிஞர் ஜி.யு. போப், மனோன்மணியம்சுந்தரனார் ஆகியோரோடு உ.வே.சா. நெருங்கிய நட்பு பாராட்டினார்.

# திரைப்படத் தயாரிப்பாளர் எஸ்.எஸ். வாசன்

திரைப்பட இயக்குநர், தயரிப்பாளர், எழுத்தாளர், வார இதழ் நடத்துபவர் எனப் பன்முகம் கொண்ட எஸ்.எஸ். வாசன், கடின உழைப்பால் சாதனைச் சிகரத்தை எட்டிப் பிடித்தவர் ஆவார்.

சுப்ரமணியம் சீனிவாசன் என்பதன் சுருக்கமே எஸ்.எஸ். வாசன். 10.03.1903-இல் திருத்துறைப்பபூண்டிக்கு அருகில் உள்ள எடையூரில் பிறந்தார். இவரது இரண்டாவது வயதில் தந்தை காலமாகி விடவே பிழைப்பு தேடி குடும்பம் சென்னைக்குக் குடிபெயர்ந்தது. பள்ளிப்படிப்போடு நிறுத்திக் கொண்ட எஸ்.எஸ். வாசன், இதழ்களுக்கு விளம்பரம் சேகரிக்கும் பணியைச் செய்தார். கடின உழைப்பால் வெற்றிகரமாக விளங்கினார். 1928-இல் ஆனந்த போதினி இதழை வாங்கி ஆனந்தவிகடனாக மாற்றி, அதனை மக்கள் விரும்பும் வகையில் கொண்டு வந்தார்.

எஸ்.எஸ். வாசன் எழுதிய சதிலீலாவதி கதை 1936-இல் திரைப்படமாக வந்தது. பின்பு ஜெமினி ஸ்டுடியோவை 1940-இல் உருவாக்கி, பல திரைப்படங்களைத் தயாரித்தார். மங்கம்மா சபதம் (1943), கண்ணம்மா என் காதலி (1945), மிஸ் மாலினி(1947) ஆகிய திரைப்படங்களின் பின்னால் 1948 இல் புகழ்பெற்ற சந்திரலேகா திரைப்படத்தை இயக்கினார்.

இந்தியில் தயாரிக்கப்பட்ட சந்திரலேகா இந்திய அளவில் எஸ்.எஸ். வாசனைச் சிறந்த தயாரிப்பாளராக அடையாளம் காட்டியது. 603 பிரிண்டுகள் போடப்பட்டு, ஆங்கில துணைத் தலைப்புகளுடன் வெளியாகி முதன் முதலில் வெளிநாடுகளிலும் திரையிடப்பட்டு வெற்றி பெற்றது. இவரது இயக்கத்தில் இரு வெற்றிப்படங்கள் வஞ்சிக்கோட்டை வாலிபன்(1958), இரும்புத்திரை (1960), இவரது தயாரிப்பில் வெளியான அபூர்வ சகோதரர்கள் (1949), ஔவையார் (1953) சிறப்பானவை.

நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்ட எஸ்.எஸ். வாசன் 1969 இல் பத்மபூசன் விருதினைப் பெற்றார். 26.08.1969 இல் எஸ்.எஸ். வாசன் உடல்நலக் குறைவால் காலமானார்.